සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது
All rights Reserved

අධිකරණ හා බන්ධනාගාර ප්‍රතිසංස්කරණ අමාත්‍යාංශය
**நீதி மற்றும் சிறைச்சாலைகள்மறுசீரமைப்பு அமைச்சு**
MINISTRY OF JUSTICE AND PRISON REFORMS

# දිවුරුම්දුන් භාෂා පරිවර්තකයන් පත්කිරීම සඳහා වන විභාගය - 2019
# சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கான பரீட்சை- 2019
# Examination for the Appointment of Sworn Translators - 2019

පරිවර්තනය (දෙමළ/ඉංග්‍රීසි)
Translation (Tamil/English)

කාලය : පැය 1 ½
நேரம்: 1 ½ மணித்தியாலம்
Time : 1 ½ Hour

මුළු ලකුණු : 100
மொத்தப் புள்ளிகள்:100
Full Marks: 100

**සියලුම ප්‍රශ්න වලට පිළිතුරු සපයන්න.**
**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
**Answer all the Questions**

---

1 ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கவும்.

மார்க்ஸீயச் சிந்தனைப் பாரம்பரியத்தில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்திய அல்தூஸர் “கருத்துநிலை என்பது (தனக்குரியதர்க்கப் பாட்டினையும் இறுக்கத்தையும் கொண்ட) ஓர் அமைப்பு முறையாகும். இந்த அமைப்பு சில குறியீடுகளைக் கொண்டது (படிமங்கள்,ஐதீகங்கள் ,கருத்துக்கள்,எண்ணக்கருத்துக்கள் என தேவைக்கும் இடத்துக்கும் ஏற்பவருவன.) இதற்குக் குறிப்பிட்ட அந்தச் சமூகத்திலே வரலாற்று நிலைப்பட்ட ஓர் இருப்பும் ஒரு கடமைப்பாங்கும் உண்டு. சமூகங்களின் வரலாற்றுச் சீவியத்துக்கு இந்தக் கட்டமைப்பு அவசியமானதாகும்” என்று கூறுவர். மேலும் எந்த ஒரு சமூகத்திலும் மனிதர்கள்,தங்கள் சீவியத்தின் தேவைகளுக்கியையத் தம்மை உருவாக்கிக் கொள்வதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் கருத்து நிலையானது (அது வெகுசன குறியீடுகளின் ஓர் அமைப்பு என்ற முறையில்) முக்கியமானது என அவர் கூறுவர்.

“பண்பாடு” என்பது மனித சமூகத்தின் குறியீட்டு அமிசங்கள் பற்றியதும்,அச்சமூகம் கற்றறிந்து கொள்ளும் அமிசங்கள் பற்றியதுமாதும். கருத்து நிலை என்பது (இதனால்) பண்பாட்டினுள்ளிருந்து மேற்கிளம்புவதாகவேயிருக்கும். அதாவது எந்த ஒரு கருத்து நிலையும், தனது பண்பாட்டினை எடுத்துக்காட்டுவதாகவே இருக்கும். ஆனால் ஒன்று,அவ்வாறு எடுத்துக்காட்டும் கருத்து நிலையானது அப்பண்பாட்டினுள் இடம்பெறும் சகல நடைமுறைகளையும் ஒருங்கு திரட்டிப் பிரதிபலிக்காது. அந்தப் பண்பாட்டினுள் மேலாதிக்கம் செலுத்தும் குழுமத்தினது கருத்துக்களின் பிரிவு ஆகவே இருக்கும். எனவே ஒரு சமூகத்தின் கருத்து நிலை என்பது அச் சமூகத்தின் பிரதான சக்திகளினை எடுத்துக் காட்டுவதாகவே இருக்கும்.

இவ்வேளையில் நாம் இன்னுமொரு விடயத்தையும் மனத்திருத்திக் கொள்ளல் வேண்டும். இந்தக் கருத்து நிலையினில், சமூகமேலாண்மையுள்ள சக்திகளின் மேலாதிக்கம் காணப்படும். அதாவது அந்தச் சமூகத்திலுள்ள மேலாதிக்கமான சிந்தனைப் போக்குக்கு அங்கீகாரம் வழங்குவதாக இந்தக் கருத்துநிலை அமையும். அன்ரோனியோகிறாம்ஸ்சியின் இந்த மேலாண்மைக் கொள்கை மிக முக்கியமான ஒன்றாகும். குறிப்பிட்ட சமூகத்தின் மேலாண்மைக் குழு தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி அதனை இயல்பான, ஏற்புடைமையுள்ள ஒன்றாக ஆக்குவதற்கு பண்பாட்டின் பல்வேறு அமிசங்களைப் பயன்படுத்தும் பாடசாலைகள், ஆலயங்கள், புதினப்பத்திரிகைகள், கட்சிகள் எனப் பல இப்பணிக்குப் பயன்படும். (ලකුණු-50)

2 දෙමළ භාෂාවට පරිවර්තනය කරන්න.

## Minister of Buddhasasana& Wavamba Development

**Duties & Functions**

1. Formulation of policies, programmes and projects; implementation, monitoring and evaluation in relation to the subjects of Buddhasasana& Wayamba Development, and those subjects that come under the purview of Departments, Statutory Institutions and Public Corporations listed in Column II

2. Adopting necessary measures to inculcate religious values in people aimed at building a virtuous society

3. Implementation of appropriate programmes and projects to protect, foster and promote Buddhism

4. Implementation of appropriate programmes and projects to protect and foster the Buddha Sasana

5. Implementation and monitoring of programmes in relation to Buddhism

6. Provision of facilities for promotion Dhamma School education

7. Planning and development of Sacred areas

8. Servicing the needs of the Supreme Advisory Council

9. Adopting measures for the propagation of Theravada Buddhism internationally

10. Matters relating to the development of Lumbini sacred area, allocated to Sri Lanka in Nepal

**Departments, Statutory Institutions & Public Corporations**

1. Department of Buddhist Affairs

2. Buddha Sasana Fund

3. International Buddhist Centre

**Laws and Ordinance to be implemented**

1.Buddha Sasana Fund Act, No. 35 of 1990

2.Buddhist Temporalities Ordinance, No. 19 of 1931 All other legislations pertaining to the subjects specified in Column I and II, and not specifically brought under the purview of any other Minister.

(ලකුණු-50)